www.Padasalai.Net www.CBSEtips.in

# முதல் இடைப் பருவத் தேர்வு - 2022

**12** - ஆம் வகுப்பு

## வணிகவியல்

பதிவு எண். | | | | | | |

காலம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

### பிரிவு - I

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 15 x 1 = 15

1. வேலையை பல்வேறு சிறு பணிகளாக பிரிப்பதை ................ என்பர்
   அ) ஒழுங்கு ஆ) பயன்பாடு இ) வேலைப்பகிர்வு ஈ) சமத்துவம்
2. மேலாண்மை என்பது ஒரு ............ .
   அ) கலை ஆ) அறிவியல்
   இ) கலை மற்றும் அறிவியல் ஈ) கலை அல்லது அறிவியல்
3. பின்வருவனவற்றுள் சரிபார்ப்பு செயல்பாடு எது?
   அ) திட்டமிடுதல் ஆ) ஒழுங்கமைத்தல் இ) பணியமர்த்தல் ஈ) கட்டுப்படுத்துதல்
4. மேலாண்மையின் செயல்பாடுகளில் முதன்மையானது எது?
   அ) புதுமைப்படுத்துதல் ஆ) கட்டுப்படுத்துதல் இ) திட்டமிடுதல் ஈ) முடிவெடுத்தல்
5. ............... உதவியால் அதிகாரப் பகிர்வு எளிதாகச் செய்யப்படுகிறது
   அ) முதுகலை வணிக மேலாண்மை ஆ) விதிவிலக்கு மேலாண்மை
   இ) குறியிலக்கு மேலாண்மை ஈ) முதுகலை வணிக நிர்வாகம்
6. முக்கியமான சிக்கல்களைக் கண்டறிவதன் மூலம், வாய்ப்புகளையும் அச்சுறுத்தல்களையும் மேலாண்மை எச்சரிக்கையாக வைத்திருக்க .............. உதவுகிறது.
   அ) முதுகலை வணிக மேலாண்மை ஆ) விதிவிலக்கு மேலாண்மை
   இ) முதுகலை வணிக நிர்வாகம் ஈ) குறியிலக்கு மேலாண்மை
7. நிதிச்சந்தை வணிக நிறுவனங்களுக்கு ........... உதவுகிறது
   அ) நிதிகளை திரட்டுவதற்கு ஆ) பணியாட்களை தேர்வு செய்வதற்கு
   இ) விற்பனை அதிகரிப்பதற்கு ஈ) நிதித் தேவையை குறைப்பதற்கு
8. ஒரு இரண்டாம் நிலைச் சந்தையில் ஒரு பத்திரம் எத்தனை முறை விற்கப்படலாம்
   அ) ஒரே ஒரு முறை ஆ) இரண்டு முறை இ) மூன்று முறை ஈ) பல முறை
9. மூலதனச் சந்தையின் பங்கேற்பாளர் .............. ஆவார்.
   அ) தனிநபர் ஆ) நிறுமங்கள்
   இ) நிதி நிறுவனங்கள் ஈ) மேலே உள்ள அனைத்தும்
10. மூலதனச் சந்தை ............... ஐ வழங்குவதில்லை
    அ) குறுகிய கால நிதி ஆ) கடனுறுதி பத்திரங்கள்
    இ) சமநிலை நிதி ஈ) நீண்டகால நிதி
11. பணச்சந்தை வழங்குவது ........... .
    அ) நடுத்தர கால நிதிகள் ஆ) குறுகிய கால நிதிகள்
    இ) நீண்ட கால நிதிகள் ஈ) பங்குகள்
12. பணச் சந்தையில் முக்கிய பங்காற்றும் அமைப்பு ........ .
    அ) வணிக வங்கி ஆ) இந்திய ரிசர்வ் வங்கி
    இ) பாரத ஸ்டேட் வங்கி ஈ) மைய வங்கி
13. பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடு.
    அ) வணிகத் தாள் ஆ) வைப்புச் சான்றிதழ்
    இ) கருவூல இரசீதுகள் ஈ) கடனீட்டுப் பத்திரங்கள்



Scanned with OKEN Scanner
Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

14. பொருத்துக.

அ) துணிகர மூலதன நிதி - 1) புதிய திட்டம் மற்றும் கண்டுபிடிப்பு

ஆ) பரஸ்பர நிதி - 2) சிறு முதலீட்டாளர்களின் சேமிப்புகள்

இ) ஏட்டுக்கடன் தரகு முகமை - 3) நிதி நிறுவனங்கள் செய்யும் நிதி ஏற்பாடு

ஈ) இந்திய உடனடி பங்கு மாற்றகம் - 4) மின்னணு மூலம் பங்கு வணிகம்

அ) iv, iii, ii, i  ஆ) i, ii, iii, iv  இ) i, iii, ii, iv  ஈ) iv, ii, iii, i

15. ***கூற்று (A) :*** ஒவ்வொரு கீழ்ப்பணியாளரும் ஒரே ஒரு மேலாதிகாரியிடமிருந்து மட்டுமே கட்டளைகளை பெற வேண்டும்.

***காரணம் (R) :*** ஒன்றுக்கு மேற்பட்ட மேலாதிகாரியிடமிருந்து கட்டளைகளை பெற்று பணி செய்தால் அது குழப்பத்தையும் முரண்பாடுகளையும் உருவாக்கிவிடும்.

அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது சரியான விளக்கம்

ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது சரியான விளக்கம் அல்ல

இ) (A) தவறு ஆனால் (R) சரி  ஈ) (A) சரி (R) தவறு

## பிரிவு - II

**குறிப்பு : எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண். 22- க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 5 X 2 = 10

16. மேலாண்மைக் கருவிகளைப் பட்டியலிடுக.
17. திட்டமிடுதல் என்றால் என்ன?
18. குறியிலக்கு மேலாண்மையின் ஏதேனும் இரண்டு நன்மைகளைக் குறிப்பிடுக.
19. உடனடிச் சந்தை என்றால் என்ன?
20. மூலதனச் சந்தை என்றால் என்ன?
21. அரசுப் பத்திரங்கள் சந்தை என்றால் என்ன?
22. பின்னொரு நாளில் பொருட்களை கைமாற்றிக் கொள்வதற்காக இன்றே விலையை முடிவு செய்து கொள்ளும் சந்தையின் பெயர் என்ன?

## பிரிவு - III

**குறிப்பு : எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண். 29 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 5 X 3 = 15

23. மேலாண்மையை நிர்வாகத்திலிருந்து வேறுபடுத்துக. (ஏதேனும் மூன்று)
24. நிறுவனம் குறித்த முக்கியத் தகவல்கள் எதன் வாயிலாக பணியாளர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது?
25. குறியிலக்கு மேலாண்மையின் இயல்புகளை எழுதுக.
26. இரண்டாம் நிலைச் சந்தை - சிறுகுறிப்பு வரைக.
27. துணிகர மூலதன நிதி மற்றும் ஏட்டுக்கடன் தரகு முகமைக்கு பொருள் தருக.
28. கருவூல இரசீதின் பொது இயல்புகள் யாவை? (ஏதேனும் மூன்று)
29. சிறு முதலீட்டாளர்களின் சேமிப்புகளை பெரிய முதலீடாக மாற்றும் நிதி நிறுவனங்களை .......... என்று அழைக்கிறோம்?

## பகுதி - IV

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 2 X 5 = 10

30. நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி. (ஏதேனும் ஐந்து). ***(அல்லது)***

மேலாண்மையின் முக்கிய செயல்பாடுகளை விளக்குக. ***(ஏதேனும் ஐந்து)***

31. விதிவிலக்கு மேலாண்மை நன்மைகள் என்ன? (ஏதேனும் ஐந்து) ***(அல்லது)***

முதல் நிலைச் சந்தை மற்றும் இரண்டாம் நிலைச் சந்தைக்கும் இடையேயான வேறுபாடுகளை விளக்குக. (ஏதேனும் ஐந்து)



Scanned with OKEN Scanner

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com